தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 10, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 ஆகஸ்ட் 26, வியாழக்கிழமை

சென்னை-600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."

தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.

[*குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. சிறப்புக் கவன ஈர்ப்பு

கூடலூர், காட்டு யானைகளின் தாக்குதலால் ஏற்பட்டுள்ள சேதங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் காட்டு யானை தாக்குதலின் காரணத்தால் வீடுகளில் சேதம் ஏற்பட்டிருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள், விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

*__திரு. பொன். ஜெயசீலன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வரலாற்றுச் சிறப்புமிக்க சான்றோர் பெருமக்கள் அமர்ந்துள்ள இந்த அவையில், சாமானிய, ஏழை தேயிலைத் தோட்ட விவசாயியின் மகனாகிய எனக்கும், இந்த நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்றக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியினை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.*

நான் சார்ந்திருக்கின்ற சட்டமன்றத் தொகுதி கூடலூர் சட்டமன்றத் தொகுதியாகும். இத்தொகுதி வனம் சார்ந்த பகுதி. இந்தப் பகுதியிலே அடிக்கடி யானைகளால் மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பெரும் சேதம் விளைவிக்கப்பட்டு வருகின்றது. தேவாலாட்டி, நாடுகாணி, வாளவயல், மரப்பாலம், ஆமைக்குளம், புளியம்பாறை ஆகிய பகுதிகளில் கடந்த 6 மாத காலமாக ஒரு தாய் யானை மற்றும் ஒரு குட்டி யானையின் மூலமாக அங்கு வாழக்கூடிய மக்களின் பல வீடுகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த 17–8–2021–லிருந்து நேற்றுவரை அந்த யானைகள் 10 வீடுகளைத் தாக்கி, சேதப்படுத்தியுள்ளன. அதுமட்டுமின்றி, விவசாயப் பயிர்களுக்கும் பெரும் சேதங்களை விளைவித்து வருகின்றன. எனவே, இந்த இரண்டு யானைகளையும் பிடித்து, தொலைவான வேறு பகுதிக்குக் கொண்டுசெல்ல வேண்டுமாய் பணிவோடு வேண்டுகிறேன்.

மேலும், இவ்வாறு யானைகளால் சேதப்படுத்தப்படும் வீடுகளுக்கு வனத் துறையின் மூலமாக எந்தவித இழப்பீடும் வழங்கப்படுவதும் இல்லை. அதற்கு அந்த ஏழை, எளிய மக்களின் வீடுகள் பட்டா நிலங்களில் இல்லையென்று வனத் துறையின்மூலம் காரணம் சொல்லப்படுகிறது. இதனால், ஏழை, எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, தயவுகூர்ந்து, பாதிக்கப்படுகின்ற, சேதமடைகின்ற வீடுகளுக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.25 ஆயிரம் வழங்கப்பட வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்த விஷயத்தை எடுத்துச் செல்கிறேன்.

2021 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மேலும், யானைகள் ஊருக்குள் புகாமல் இருப்பதற்காக, அகழிகளை வெட்டி ஆழப்படுத்தி, அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தங்கள் மூலமாக நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு யானைகள் உள்ளன. ஒன்று, ஆண் யானை; மற்றொன்று பெண் யானையான மக்னா வகையான யானை கூடலூர் கோட்டம், பந்தலூர் வனச் சரகம், தேவாலாட்டி பகுதியிலுள்ள வீடுகள், குடியிருப்புகள் மற்றும் கடைகளை எப்போதாவது சிதைத்து சேதப்படுத்துகின்றன. வனப் பணியாளர்களின் அறிக்கையின்படி, கடந்த ஒரு வருடமாக யானைகள் சில வீடுகளைச் சேதப்படுத்தியுள்ளன. கூடலூர் கோட்டத்தைச் சேர்ந்த வனப் பணியாளர்கள் யானைகளை வனப் பகுதிக்குள் விரட்டுவதற்கென களப் பணியாளர்களை நியமித்து, வீடுகளையும், மக்களையும் யானைகளால் ஏற்படும் சேதங்களிலிருந்து பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர். கடந்த 15 நாட்களில், பந்தலூர் வனச் சரகம், முச்சிக்குண்ணம், தேவாலாட்டி பகுதிகளில் யானைகள் வீடுகளைச் சேதப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வன அலுவலர் அவர்கள் 23–8–2021 அன்று கூடலூர் உள்ளூர் மக்களுடன் சமாதானக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அவர் அக்கூட்டத்தில் பேசி, அப்பகுதி மக்களிடம் உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார்.*

முதுமலை புலிகள் காப்பகத்தில் பயிற்சி பெற்ற கும்கி யானைகள் மற்றும் 40 முதல் 45 களப் பணியாளர்களையும் நியமித்து, கூடலூர் கோட்டத்தில் உள்ள குடியிருப்புப் பகுதிகளைச் சேதப்படுத்தும் யானைகளை மீண்டும் வனப் பகுதிக்குள் விரட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனித உடைமைகளையும், பொது மக்களையும் யானைகளால் ஏற்படும் சேதங்களிலிருந்து பாதுகாப்பதற்காக, குடியிருப்புப் பகுதிகளுக்குள்

வரும் யானைகளை வனப் பகுதிக்கு விரட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் மற்றும் துணை இயக்குநர்களுக்கும், தலைமை வன உயிரினக் காப்பாளரால் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. யானைகளைக் கண்காணிக்க ட்ரோன்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின்மூலம் யானைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மிளகுப் பொடி, தேனீக்கள் மற்றும் மிளகாய்த் தூள் போன்றவற்றைக் கொண்டு இரவு நேரங்களில் வரும் யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த களப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலைமை முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் வரும்வரை, வேட்டைத் தடுப்புக் குழுக்களை அப்பகுதியில் முகாமிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–05

2. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் தொடர்பான சட்டமுன்வடிவினை நான் இந்த அவையிலே அறிமுகப்படுத்த விழைகிறேன்.*

தொழிற்கல்விப் படிப்புகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில், நகர்ப்புறங்களிலுள்ள தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களைவிட, கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் சேர்க்கை